# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்
## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)
## அவர்கள் இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில்
## 16.10.2009 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தஷஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு ஹுஸுர் அவர்கள் கூறினார்கள்:**

திருக்குர்ஆனில் **மத்[த்]தீன்** என்ற சொல் மூன்று இடங்களில் வருகிறது. அதில் **முதலாவதாக சூரா அஃராஃப், இரண்டாவதாக சூரா ஸாரியாத், மூன்றவாதாக சூரா கலம்** ஆகிய இடங்களில் வருகிறது. இதில் ஒவ்வொரு இடத்திலும் **ம[த்]தீன்** என்ற சொல்லை தனது பண்புப் பெயராகக் கூறி, நிராகரிப்பவர்களின் தீய முடிவைப் பற்றி எச்சரித்துள்ளான். அதனைப் பற்றி கூறும் முன் **ம[த்]தீன்** என்ற சொல்லின் பொருள் குறித்து சிறிது விளக்குகிறேன்.

முதலாவது, பொதுவாக இச்சொல் பயன்படுத்தப்படுகிறது. இரண்டாவது, இறைவனுக்காக இச்சொல் பயன்படுத்தப்படுகிறது. யாருக்காக பயன்படுத்தப்பட்டாலும் பொருள் ஒன்றுதான். எனினும் இறைவனுக்காக பயன்படும்போது பரந்த பொருளைத் தருகிறது. **ம[த்]தனா - நல்ல வலிமையுள்ளவன்** என்றும், மனிதனுக்கு இச்சொல் பயன்படுத்தும் போது **உறுதியான முதுகை உடையவன்** (என்றும் பொருள்படுகிறது.) அகராதிப்படி முதுகின் தண்டுவடத்தைச் சுற்றியுள்ள **வலுவான தசைகள்** என்று பொருள்.

லிஸானுல் அரப் (என்ற அகராதியில்) **ம[த்]தீன்** என்றால் **ஆற்றலும், வலுவான முதுகும் கொண்டவன்** என்று பொருள். அல்லாஹ்வின் பண்புப் பெயராக எடுக்கும் போது **உறுதியான ஆற்றலை உடையவன்**, இறை பண்பின்படி **குறுக்கே எந்தவோர் ஆற்றலோ, தடையோ வர முடியாத உறுதியான ஆற்றல்** என்று பொருள். **அல் ம[த்]தானா** என்றால் **முழுமையை அடைந்த உறுதியான ஆற்றல்** என்று பொருள்படும்.

எனவே அல்லாஹ்வின் ஆற்றல் மட்டுமே இந்த எல்லா பொருள்களின்படி முழுமையாக, உறுதியாக தனது நபிமார்கள் மற்றும் அன்பிற்குரியவர்களுக்கு எதிராக வெளிப்படுகிறது. அது வெளிப்படும் போது எதிரிகளின் சிந்தனை கூட அதனருகில் சென்றிருக்க முடியாது. அதனை எதிர்கொள்வதற்கான ஆயத்தங்களையும் செய்திருக்க முடியாது.

அல்லாஹ்வின் அத்தகைய பிடி வருவதற்கு முன்பே **இஸ்திக்ஃபார்** செய்வது ஒன்றே அதிலிருந்து தப்பிப்பதற்கான வழியாகும். இவ்வாறு நபிமார்களுக்கு கூட இன்னின்ன வழிகளில் அவன் எதிரிகளைப் பிடிக்கப்போகிறான் என்று அறிய முடியாது. சில வேளைகளில் அவ்விறைவனே நபிமார்களுக்கு அறிவித்துக் கொடுத்திருந்தால் தவிர அவர்களால் புரிய முடியாது.

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்குக் கூட பத்ர் மைதானத்தில் சில எதிரிகளின் முடிவுகளைப் பற்றி அறிவித்துக் கொடுத்தான். இன்னின்ன இடங்களில் அவர்களது சடலம் வீழ்ந்து கிடக்கும் என்று கூட அறிவிக்கப்பட்டது.

இப்போது, நான் குறிப்பிட்ட அந்த வசனங்களைப் பற்றி இறைவன் என்ன அறிவுரை கூறுகிறான் என்று பார்க்கலாம்.

**சூரா அஃராஃப் -ன் 183, 184 வது வசனங்களில் அல்லாஹ் கூறுகின்றான்:**

**வல்லஸீன கஸ்ஸபூ பிஆயாத்தினா ஸனஸ்த்தத்ரிஜுஹும் மின் ஹய்ஸு லா யஃலமூன். வஉம்லீ லஹும் இன்ன கய்தீ ம[த்]தீன்.**

*பொருள்: எம்முடைய அடையாளங்களைப் பொய்ப்படுத்துபவர்களை அவர்கள் உணர்ந்து கொள்ளா விதத்தில் படிப்படியாக நாம் (அழிவின் பக்கம்) இழுத்துக் கொண்டு வருவோம்.*

*நான் அவர்களுக்கு(த் தற்போது) காலக்கெடு அளித்திருக்கிறேன். என் திட்டம், நிச்சயமாக மிக்க உறுதிவாய்ந்தது. (7:183, 184)*

**அடுத்து சூரா கலம் -ன் 45,46 ஆகிய வசனங்களில் அல்லாஹ் கூறுகின்றான்:**

**ஃபஸர்னீ வமய்யுகஸ்ஸிபு பிஹாஸல் ஹதீஸ். ஸனஸ்(த்)தத் ரிஜ்ஹூம் மின்ஹய்ஸு லாயஃலமூன். வஉம்லீ லஹூம். இன்ன கய்தீ மத்(த்)தீன்.**

*பொருள்: எனவே, நீர் என்னையும், இவ்வசனத்தைப் பொய்யாக்குபவர்களையும் விட்டுவிடுவீராக. நாம் அவர்களை அவர்கள் அறியாத இடத்திலிருந்து படிப்படியாக (அழிவின் பக்கம்) இழுப்போம்.*

*நான் அவர்களுக்கு காலக்கெடு வழங்குகின்றேன். (ஏனென்றால்) என் திட்டம் மிக்க வலுவானது. (68:45,46)*

அல்லாஹ்வின் அடையாளங்களை நிராகரிப்பவர்கள் – ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கும் சஹாபாக்களுக்கும் தொல்லை கொடுத்தவர்கள், தமக்கு எவ்வாறு தண்டனை வரப்போகிறது என்பதை அறியவில்லை. இதன் முதல் காட்சியை அல்லாஹ் பத்ர் மைதானத்தில் காட்டினான்.

இந்த இரு சூராக்களும் மக்காவில் இறங்கியவையாகும். சூரா கலமின் ஆரம்ப 4–5 சூராக்களில் ஒன்று என்று கூறப்படுகிறது. இன்னும் சிலரின் கருத்துப்படி சூரா அலக்கிற்கு அடுத்து இறங்கிய சூராவாகும். இவ்வாறு சூரா ஸாரியாத்திலும் அல்லாஹ் தனது **மத்(த்)தீன்** என்ற பண்பு குறித்து கூறுகிறான். (51:59) மக்காவில் நடந்த அநீதிகள் இஸ்லாமிய வரலாற்றில் மிகவும் வேதனைமிக்க அத்தியாயங்களாகும். ஆனால் அந்நிலையிலும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு இறைவன் ஆறுதல் கூறுகின்றான்.

நான் மதீன் ஆவேன். எனது பிடியும் மிகவும் வலுமை வாய்ந்தது. மனிதனை துளைத்துவிடக் கூடியதும் உறுதியானதும் ஆகும். இஸ்லாமிய எதிரிகள் தப்பிப்பது சாத்தியமில்லை. இவ்வாறு கூறி எதிரிகளின் கர்வத்தை இறைவன் உடைத்தான்.

அல்லாஹ் இந்த இரு அத்தியாயங்களிலும் நமது அடையாளங்களை பொய்யாக்குபவர்களை அவர்களே நினைத்துப் பார்க்க முடியாத இடத்திலிருந்து பிடித்து விடுவோம் என்று அல்லாஹ் விளக்குகிறான். தமக்கு என்ன நடக்கிறது என்று தெரிய முடியாமல் திணறிவிடுவர். எனவே அல்லாஹ் கூறுகிறான். நபியே, இம்மக்கள் உம்மை பொய்யாக்குகிறார்கள். அதுபற்றி பொருட்படுத்தாதீர். ரஸூலே, உம்மை பொய்யாக்கி, உம்மை ஏற்றுக் கொண்டவர்களை அநீதிக்கு உள்ளாக்குகின்றனர். அவர்களை என்னிடம் விட்டுவிடும். அவர்கள் தமது அநீதியில் வெற்றி பெற்று விடுவர் என்று நீர் கருத வேண்டாம். அல்லது தமது அநீதியால் மூஃமின்களை உம்மிடமிருந்து பிரித்து விடுவார்களோ என்றும் எண்ண வேண்டாம். ஒருபோதும் அவ்வாறு செய்ய முடியாது. நான் எல்லா ஆற்றல்களின் உரிமையாளன் ஆவேன். உறுதியான ஆற்றல் உள்ளவன். படிப்பினை தரக்கூடிய ஒரு முடிவை நான் அவர்களுக்கு வழங்குவேன். நான் அவர்களிடம் ஒருவேளை சீர்திருத்தம் உருவாகலாம் என்பதற்காகவே காலக்கெடு வழங்குகிறேன். ஒருவேளை அவர்கள் ஷய்த்தானிய செயல்களை விட்டு திரும்பி வந்துவிடலாம். இறைவன் பலவீனத்தால் அவர்களை விட்டுவிட்டான் (நவூதுபில்லாஹ்) என்று ஒருபோதும் பொருளன்று. அவனது கையிலேயே எல்லாம் இருக்கின்றன. எல்லா மனிதனின் உயிரும் அவன் கையிலேயே உள்ளன. அல்லாஹ் விரும்பும்போது அதனை பிடித்துவிட முடியும்.

இறைவனுக்கு எந்த அவசரமும் இல்லை. இந்த அநீதியிழைப்பவர்களை தனது பிடியில் கொண்டு வந்து விடுவான். இறைவனது ஆட்டுரல் அவர்களை தூள்தூளாக்கி தூசியாக்கி விடும். மக்காவில் அவர்கள் மீது அநீதியிழைக்கப்பட்ட போது ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு அல்லாஹ் இந்த ஆறுதலை வழங்கினான். அல்லாஹ்வுடைய அளவற்ற ஞானம் இவர்களின் தீய செயல்களின் முடிவை நன்கு அறிந்துள்ளது. எனவே அவனது ஞானம் இவர்களுக்கு என்ன முடிவைக் கொடுக்க வேண்டும் என்று அறிந்துள்ளது. **மத்(த்)தீன்** என்ற சொல்லின் மூலம் அது வெளிப்பட்டுள்ளது. தனது அன்பிற்குரியவர்களின் எதிரிகளை மிக உறுதியாக பிடித்து விடுகிறான். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களைவிட அதிகமாக அல்லாஹ்வுக்கு பிடித்தவர்கள் யார் இருக்க முடியும்?

பத்ர் மைதானத்தில் தனது நேசத்திற்குரியவருக்கு உதவி செய்து, எதிரிகளை பிடிப்பதற்கு தனது வல்லமையின் உன்னதமான காட்சியைக் காட்டினான். உத்பா, ஷைபா, அபூஜஹில் போன்ற தலைவர்கள் அநீதியிழைத்த போது தானே பெரும் தலைவன் என்று புரிய வைத்தான். அழகு, ஆற்றல் எல்லாவற்றிலும் சிறந்தவர்களாக அந்த எதிரிகள் தம்மை கருதியிருந்தனர். அவை அனைத்தும் மண்ணோடு மண்ணாகிப் படிப்பினை ஆகின. அபூஜஹில் கர்வத்தில், தனது சக்தியின் மீதுள்ள நம்பிக்கையில் எல்லை மீறி விட்டான். அவன் அக்காலத்தைய ஃபிர்அவ்னாக தன்னை கருததினான். அவனை அல்லாஹ் எவ்வாறு பழிவாங்கினான்!

அவனை இரு சிறுவர்கள்தான் கொன்றனர். இறுதியில், அவன் கூறினான். அந்தோ! விவசாயிகள் கைகளினாலும் நான் இறந்துவிடக் கூடாதே! மதீனாவாசிகள் விவசாயம் செய்து பிழைப்பு நடத்தி வந்தனர். (விவசாயிகளை) மிகவும் ஏளனமாகக் கருதினர். ஆனால் இறைவன் அந்த விவசாயிகளில் – அதுவும் சிறுவர்களின் கையால் அவனை கொலையுறச் செய்தான்.

இதுபோன்ற மற்ற எதிரிகளும் துன்பத்தையே சந்தித்தனர். மக்காவின் 24 தலைவர்கள் அப்போரில் கொல்லப்பட்டனர். அவர்கள் அனைவரையும் ஒன்றாக புதைக்குமாறு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கட்டளையிட்டார்கள். அவ்வாறே செய்யப்பட்டது. அவ்வாறு புதைக்கப்படும் போது, அந்த இடத்திற்கு வந்து இறந்தவர்களைக் குறித்து கூறினார்கள்: என் மூலமாக இறைவன் கொடுத்த வாக்குறுதிகள் உண்மையாகி விட்டதைக் கண்டீர்களா? என்னிடம் அவன் செய்த வாக்குறுதி உண்மையாகி விட்டதை நான் கண்டுவிட்டேன். (மேலும் சில வார்த்தைகளையும் கூறினார்கள்.) ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அப்போது கேட்டார்கள். இறந்துபோன இவர்களிடம் என்ன பேசிக் கொண்டிருக்கிறீர்கள்? ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: அவர்கள் இறந்து விட்டார்கள்தான். ஆனால் இவர்கள் நான் கூறியதைக் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். உமக்கு தெரியாது. இறைவன் தனது அன்பிற்குரியவர்களிடம், ‘இவர்களின் விவகாரத்தை என்னிடம் விட்டுவிடுங்கள். நான் இவர்களை என்ன செய்கிறேன் என்று பாருங்கள்’ என்று கூறினான். அதனால் சாதாரண போர்க்கருவிகளை வைத்துக் கொண்டு ஒரு சிறு கூட்டத்தினர், அனுபமிக்க நல்ல போர்க்கருவிகள் கொண்ட ஒரு பெரும் படையின் முதுகை முறித்த காட்சியை உலகம் அதுவரை கண்டதில்லை. அதுமட்டுமின்றி மக்கா வெற்றியின் போதும் அல்லாஹ் தனது பிடியின் காட்சியைக் காட்டினான். ஈரானிய மன்னர் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மீது கை வைக்க முயற்சி செய்த போது அல்லாஹ் அந்த மன்னரின் மகன் மூலமே பிடித்தான். பிறகு இறைவனின் தக்தீர் அத்தோடு நிற்கவில்லை. அவர்களின் வஃபாத்திற்குப் பிறகு அதிக காலம் கடந்துவிடவில்லை. ஈரான் மன்னன் அஹ்ஸன் பின் அம்ர் உடைய தோளில் அவரை இழிவுபடுத்துவதற்காக ஒரு மண் பையை தூக்கச் செய்தான். ஆனால் அல்லாஹ் அதனையே ஈரானின் வெற்றிக்கு அடையாளம் ஆக்கினான். இதுவே அல்லாஹ்வின் கவி மற்றும் மதீன் என்ற பண்பின் அடையாளங்களாகும். நேரம் வரும் போது பலவீனமானவர்களுக்கு, பலமிக்கவர்களின் மீது ஆதிக்கம் செலுத்த வைத்து விடுகிறான்.

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்ளின் காலத்தின் பக்கம் நாம் திரும்பிச் சென்று பார்க்கும் போது, எதிரிகளுக்கு புரிவதற்கு காலஅவகாசம் கூட வழங்கினான். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் ஹிஜ்ரத் செய்த போது அந்த எதிரிகள் ஃபிர்அவ்னிய செயலைச் செய்யாமல் இருந்திருந்தால் பத்ரில் ஏற்பட்ட தீய முடிவு அவர்களுக்கு வந்திருக்காது. அறிவு இருந்தால், நல்லியல்பு இருந்தால் நிச்சயமாக அவர்களுக்கு சிந்திக்கும் நிர்பந்தம் ஏற்பட்டிருக்கும். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடன் ஏதோ ஓர் ஆற்றல் உள்ளது என்பதை உணர்ந்திருப்பர். அந்த ஆற்றல் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களைக் காப்பாற்ற முடியும் என்றால் நம்மையும் பிடிக்க முடியும் என்று உணர்ந்திருப்பர். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் வீட்டின் முன் அனைவரும் சூழ்ந்திருக்கும் நிலையில், வீட்டை விட்டு வெளியேறியபோதும் தமது அறிவுக்கு திரைபோட்டு விட்டனர். அப்போதாவது புரிந்திருக்க வேண்டும். பிறகு ஹஸ்ரத் அபூபக்கர் (ரலி) அவர்களுடன் குகையில் இருந்த போது பாதங்களின் அடையாளங்களைக் கண்டும்கூட குகைக்குள் பார்க்கவில்லை. மேலும் அக்கூட்டத்தில் ஒருவர், ஒன்று அவர் இந்த குகையில் இருக்க வேண்டும். அல்லது வானத்திற்கு போயிருக்க வேண்டும் என்று கூறவும் செய்கிறார். அப்போதும் யோசிக்கவில்லை. ஏனெனில் அவர்களின் தீய இயல்பு தமது முடிவை சந்திக்க வேண்டியிருந்தது.

எனவே அவர்கள் கவனிக்கவில்லை. பிறகு பயணத்தின்போது அவர்களை பிடித்து விடுவதற்க எவ்வளவோ முயற்சி செய்தனர். முடிவில் அல்லாஹ் அவர்களை நலமாக மதீனாவில் கொண்டு சேர்த்தான். அதற்குப் பிறகும் அல்லாஹ் அவ்வப்போது எதிரிகளுடன் எவ்வாறு நடந்து வருகிறான் என்பதை நான் கூறி விடுகிறேன். பத்ரிலிருந்து மக்கா வெற்றி வரை அவர்களை அல்லாஹ் எவ்வாறு பாதுகாத்து வந்தான்? எதிரிகளைப் பிடித்தான். அதற்குப் பிறகு வந்த யுத்தங்களிலும் அதையே செய்தான்.

**இறைவன் ஓரிடத்தில் கூறுகின்றான்:**

**வலா யஹ்ஸபன்னல்லஸீன கஃபரூ அன்னமா னும்லீலஹும் ஹய்ருல் லிஅன்ஃபுஸிஹிம். இன்னமா னும்லீலஹும் லியஸ்தாதூ இஸ்மன். வலஹும் அஸாபும் முஹீன்.**

*பொருள்: நிராகரிப்பவர்களை நாம் விட்டுவைப்பது, அவர்களுக்கு நன்றென்று அவர்கள் ஒருபோதும் கருத வேண்டாம். நாம் அவர்களை விட்டு வைக்கின்றோம் (என்றால்) அதன் விளைவு அவர்கள் (தங்கள்) பாவங்களில் முன்னேறுவதேயாகும். அவர்களுக்கு இழிவுபடுத்தும் ஆக்கினை (விதிக்கப்பட்டு) உள்ளது. (3:179)*

நல்லியல்பு கொண்டோர் உண்மையைப் புரிந்து கொண்டு இறைவனின் பிடியில் இருந்து தப்பிக்க வேண்டும் என்பதற்காகவே அல்லாஹ் காலக்கெடு வழங்குகிறான். அநீதியில் முன்னேறுபவர்களுக்கு இந்தக் காலக்கெடு மேலும் அநீதியையே அதிகமாக்குகிறது. (தொடர்ந்து) பாவத்தினால் பீடிக்கப்படுகின்றனர். அல்லாஹ்வினால் அனுப்பப்பட்டவரை மறுத்து அநீதியில் முன்னேறுகின்றனர். இறுதியில் உறுதியான ஆற்றல் உள்ளவனின் பிடியில் மாட்டிக் கொண்டு, இழிவுபடுத்தும் தண்டனையில் போடப்படுகின்றனர்.

அத்தகையவர்களுக்கு தவ்பா செய்ய எந்த வாசலும் திறப்பதில்லை. பிறகு அல்லாஹ்வின் செக்கிலிட்டு பிழியப்படுகின்றனர். இறைவன் திருக்குர்ஆனில் ஃபிர்அவ்னுக்கு வழங்கப்பட்ட காலக்கெடு பற்றியும், பிறகு அவனைப் பிடித்தது பற்றியும் கூறுகிறான்.

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் எதிரிகள் அதைப்போன்றே இறைவனின் பிடியில் வருவார்கள் என்பதை புரிய வைத்தான். இறைவன் எதிரிகளைப் பிடிப்பதற்கென்று சில வழிமுறைகள் உள்ளன. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் காலகட்டம் ஒரு கம்பீரமான காலகட்டமாகும். எதிரிகளுடன் யுத்தம் செய்ய வேண்டியது வந்தது. எதிரிகள் யுத்தம் தொடுத்ததால் அல்லாஹ் அதே முறையில் அவர்களைப் பிடித்தான். அல்லாஹ் இஸ்லாமிய எதிரிகளை முஸ்லிம்களுக்கு எதிரில் அவர்கள் பயன்படுத்திய அதே ஆயுதத்தைக் கொண்டே இழிவுபடுத்தினான். தனது உறுதியான பிடி வலுவானது என்பதை காட்டினான். இன்றும்கூட அல்லாஹ்வின் மதீன் என்ற பண்பு வேலை செய்யவே செய்கிறது. முன்னரைப் போன்றே **உம்லி லஹும் இன்ன கய்தி ம[த்]தீன்** – காலக்கெடு அளிக்கிறேன். எனது பிடி உறுதியானது என்பதை இப்போதும் காட்டுகிறான். வருங்காலத்திலும் காட்டுவான். ஆனால் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய காலத்தில் வாளினாலான போர் நடைபெறவில்லை. நான் ஏற்கனவே கூறியது போன்று ஒவ்வொரு காலத்திலும் எதிரிகளைப் பிடிக்க ஒரு வழிமுறை வைத்துள்ளான். அதுமட்டுமின்றி ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மீது அநீதியிழைத்தவர்கள், இழிவுபடுத்தியவர்களை அல்லாஹ் எப்படி பிடிக்கப் போகிறான் என்று யோசித்துப் பார்க்கக்கூடிய முடியாத நிலையில் அவர்களைப் பிடித்தான். அல்லாஹ் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் காலத்திலும் அவர்களின் எதிரிகளைப் பிடித்து படிப்பினைக்குரிய அடையாளமாக ஆக்கியதை உலகம் கண்டது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மூலமாக நாம் என்ன செய்ய வேண்டும் என்பதையும் அறிவித்தான். ஏனெனில் அல்லாஹ்வின் பிடி அவர்களுக்கு வரத்தான் போகிறது. அதில் உங்கள் பங்கு துஆ என்ற ஆயுதத்தை பயன்படுத்துவதுதான். இந்த துஆவின் ஆயுதம் தான் பண்டிட் லேக்ராமுக்கு சிறு காலக்கெடுவிற்குப் பிறகு முடிவைத் தந்தது. அப்துல்லாஹ் ஆத்தம், டூயி போன்றவர்களுக்கும் அழிவைத் தந்தது. மற்ற எதிரிகளும் அது கொண்டே தமது தீய முடிவை அடைந்தனர்.

எனவே ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களைப் பற்றி இழிவான வார்த்தைகளை பேசுபவர்கள் இக்காலத்திலும் பாதுகாப்பாக இருக்கப் போவதில்லை. திருக்குர்ஆன் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் வாழ்க்கை சம்பவங்கள் அல்லாமல் மற்ற நபிமார்களின் வாழ்க்கை சம்பவங்கள பற்றியும் விளக்குகிறது. எதிரிகள் துன்பம் கொடுத்த போது சில காலத்திற்குப் பிறகு அவர்களின் நிலையை அப்படியே மாற்றினான். தனது அன்பிற்குரியவர்களின் எதிரிகளுக்காக முடிவு செய்த தீர்ப்பை மனித அறிவினால் நினைத்துக்கூட பார்க்க இயலாது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய சில எதிரிகளுக்கு மரணத்தை தந்து அல்லாஹ் படிப்பினையாக்கினான். சிலருக்கு காலக்கெடு வழங்கி ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய வெற்றியை அவர்கள் பார்க்குமாறு நிர்ப்பந்தப்படுத்தினான். இதுவும் அவனது பிடியின் ஒரு முறையாகும். எனவே யாரை எப்படி பிடிக்க வேண்டும் என்பதை இறைவன் தன் கையில் வைத்துள்ளான்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு இறைவன் கூறினான்.**

அவர்கள் சூழ்ச்சி செய்தனர். அல்லாஹ்வும் அதற்கு பதிலடி கொடுத்தான். நிச்சயமாக அல்லாஹ் அவ்வாறு சூழ்ச்சிக்குரிய பதிலை வழங்குவதில் சிறந்தவன். சூழ்ச்சி செய்பவர்களுக்கு பெரும் பதிலடி கிடைக்கும். அவர்களை மரணிக்கச் செய்யும் பதிலடியை தருவான். சிலரது கண்ணியத்தை மண்ணோடு மண்ணாக்கி இழிவுபடுத்தி அழிக்கின்றான். எவ்வாறிருப்பினும், அல்லாஹ்வின் தக்தீர் உலகில் வேலை செய்தது. இனியும் வேலை செய்யும் என்பதை எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் அல்லாஹ்வுக்கு மிகவும் பிரியமானவர்கள் ஆவர். அவர்களை முழுமையான ஷரீஅத்துடன் அல்லாஹ் இவ்வுலகில் அனுப்பியிருந்தான். ஒரு நபியின் முன்னறிவிப்புகள் மிக அதிகமான அளவில் நிறைவேறியது எனில், அது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முன்னறிவிப்புகள்தான். அது திருக்குர்ஆனிலும் வந்துள்ளது. அவன் கூறுகின்றான்:

ஃபஸல்லி லிரப்பிக வன்ஹர். அதிகமாக அவனை இபாதத் செய்யும். தியாகத்தின் உயர் தகுதியை நிலைநாட்டும். உம்மத்திற்கும் இபாதத் குறித்து நினைவூட்டும். முன்னரை விட அதிகமாக இறைவனது அருளை நெருங்குவீர்கள். எல்லா வகையான தியாகங்களின் தகுதியையும் நிலைநாட்ட வேண்டிய தேவை இன்றும் உள்ளது. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு அல்லாஹ் அந்த இபாதத் மற்றும் தியாகம் செய்வதற்கு தவ்ஃபீக் வழங்கினான். அது மனித சிந்தனைக்கு அப்பாற்பட்டது. பிறகு அல்லாஹ் அந்த தகுதியை அடைந்த பிறகு தனது வாக்குறுதியையும் நிலைநாட்டினான். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு ஆண் குழந்தைகள் இல்லை. அவர்களது தலைமுறை தொடரப் போவதில்லை என்றும் எதிரிகள் ஆட்சேபனை செய்தனர். பிறகு பிற்காலத்தில் ஆட்சேபனை செய்தவர்களை அல்லாஹ் எவ்வாறு இழிவுபடுத்தினான் என்று பாருங்கள். பிறக அந்த எதிரிகளின் மகன்கள் தமது பெற்றோரின் மகன் என்று கூறுவதை விட ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் மகனாக இருப்பதில் பெருமை கொண்டனர். அனைவரும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடன் வந்து சேர்ந்து கொண்டதை உலகம் கண்டது. அபூஜஹிலின் மகன் இக்ரிமா, இஸ்லாத்திற்காக தமது உயிரை அர்ப்பணித்தார். அதற்கு எப்போதும் தயாராக இருந்தார். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் பெரிய எதிரியாகிய வலீத் என்பவரது மகன் காலித் இஸ்லாத்திற்காக செய்த பணிகள் ஈடிணையற்றவை. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் இன்னொரு பெரிய எதிரியாகிய ஆஸ் என்பவரது மகன் அம்ர் பின் ஆஸ் இஸ்லாத்திற்காக பெரும் சேவை செய்பவராக மாறினார். எனவே அல்லாஹ் ஆற்றல் உள்ளவர்களுள் எல்லாம் பெரும் ஆற்றல் உள்ளவனும், மாற்றம் செய்பவர்களுள் எல்லாம் பெரும் மாற்றம் செய்பவனும் ஆவான். அவன் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் பெருமையை மேலும் மேலும் உயர்த்தி விட்டான்.

எதிரிகள் செயலிழந்து கொண்டே சென்றனர். அவர்களது சந்ததிகளையும் அல்லாஹ் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடன் இணைத்து விட்டான். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கும் **இன்னஷானியக்க ஹுவல் அப்தர்** (உம்மை வெறுக்கின்றனவனே சந்ததியற்றவன்) என்ற இல்ஹாம் இறங்கியது. இவ்வாறு எதிரிகளை அல்லாஹ் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் இழிவுபடுத்திக் கொண்டே வந்ததை உலகம் கண்டது. கண்டு வருகிறது. இது அல்லாஹ்வின் உறுதியான மாற்றம் செய்வதன் அடையாளம் இல்லையா? ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு இறைவன் செய்த வாக்குறுதி நிறைவேறியதன்

அடையாளம் இல்லையா? அஹ்மதிகள் சிந்திக்க வேண்டும். இந்த வாக்குறுதிகள் மேன்மேலும் நிறைவேறுவதை பார்ப்பதற்காக துஆ செய்து கொண்டிருக்க வேண்டும்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

அல்லாஹ்வைத் தவிர முடிவை எவரால் கூற முடியும்? அவனைத் தவிர இறுதி நாட்களைப் பற்றி எவருக்குத் தெரியும்? இந்த மனிதர் இழிவுடன் மரணமடைவது நல்லது என்று எதிரிகள் கூறுகின்றனர். இம்மனிதன் மீது பெரும் தண்டனை வர வேண்டும் என்று விரும்புகின்றனர். விரைவில் இவர்களின் இந்த தப்பெண்ணமும் தீய விருப்பமும் அவர்கள் மீதே வந்து விழும். விரைவில் அவர்கள் அழியப்போகின்றனர் என்பதில் சந்தேகமில்லை. நான் இறைவன் புறமிருந்து வந்தவன். அவனது வார்த்தைகளால் சிறப்பிக்கப்பட்டவன். ஒரு மனிதர் இறைவன் புறமிருந்து வராதவராக இருந்தும் நான் இறைவன் புறமிருந்து வந்தவன். இறைவனது வசனத்தால் சிறப்பிக்கப்பட்டவன் என்று கூறுகிறார்கள் எனில் அவர் இழிவான மரணமும் படிப்பினைக்குரிய முடிவையும் பெறுகிறார். ஒருவர் அவன் புறமிருந்து வந்திருப்பார் எனில் மரணித்த பிறகும் கூட உயிரளிக்கப்படுகிறார். அல்லாஹ்வின் அருளின் கரம் அவருடன் இருக்கிறது. உண்மையாளருடன் அவ்வருள் இருக்கின்றது. அவர் சோதிக்கப்பட்டாலும் மண்ணோடு மண்ணாகிப் போனாலும் நாளாபுறமிருந்தும் ஏச்சுப்பேச்சுக்கள், சாபங்களையே கேட்க நேர்ந்தாலும் பூமி முழுவதும் ஒன்றுசேர்ந்து அவருக்கு எதிராக திட்டம் தீட்டினாலும் அவரை ஒன்றும் செய்ய முடியாது. ஏன் முடியாது எனில் அவர் அந்த உண்மையான இறைவனுடன் இருக்கிறார். அவருக்கு இறைவன் பெரும் சோதனைகளை தருகிறான் எனில், அவரை அழிப்பதற்காக அன்று. மாறாக மேலும் மேலும் அவர் வளர்ந்து மலர்ந்து விடுவதற்காகவே அதனை தருகிறான். இதுவே அல்லாஹ்வின் வழிமுறையாகும். இறைவனது தூய நல்லடியார்களுடன் இறைவன் அவ்வாறே நடந்து கொள்கிறான். அவருக்கு கடும் துன்பம் வருகிறது. உதாரணமாக பூமியை பாருங்கள். உண்மையான விவசாயி அதனை கடுமையாக தோண்டி, அதனை துண்டு துண்டாக பிளந்து உழுது விடுகிறார். அதேபோன்று இறைவனும் தனது அடியானுக்கு சிலவேளை துன்பங்களை கொடுக்கிறான். விவசாயி நிலத்தை உழுது தனது பாதத்தால் நசுக்குகிறார்; மிதிக்கிறார். பிறகுதான் தானியங்களின் பசுமை வியக்கத்தக்க முறையில் தண்ணீருடன் சேர்ந்து தென்படத் தொடங்குகிறது. இதுவே இறைவன் தனது தேர்ந்தெடுக்கப்பட்ட அடியார்களுடன் நடந்து கொள்ளும் முறையாகும். அத்தூயவர்கள் பெரும் துன்பத்தில் போடப்படுகின்றனர். அது அவர்களை அழிப்பதற்கு அல்ல. ஓரிறை என்ற கடலின் அடியில் இருக்கும் முத்துக்கு வாரிசாக அவர்களை ஆக்குவதற்காக துன்பத்தை தருகின்றான். ஆகவே அவர்களுக்கு வரும் சோதனைகள் அதிகமாக அவன் பக்கம் குனிந்து முத்தை தேடுவதற்காகவே சோதிக்கப்படுகின்றனர். அவர்கள் நெருப்பில் போடப்படுகின்றனர். எரிக்கப்படுவதற்காக அன்று. மாறாக, இறை வல்லமை வெளிப்படுவதற்காகவும், அவரை எள்ளி நகையாடி துன்பம் தந்தவர்கள் பிடிக்கப்படுவதற்காகவும் இறைவன் அவ்வாறு செய்கிறான். அவர்களுக்கு எதிராக தப்பெண்ணம் மூட்டிவிடப்படுகிறது. எந்த அளவுக்கு எனில் மக்கள் சிந்தித்துப் பார்க்க முடியாத அளவுக்கு தப்பெண்ணம் மூட்டிவிடப்படுகிறது. இக்காலத்தில் இதே ஆட்சேபனையையும் மக்கள் செய்கின்றனர். இவர் உண்மையாளர் எனில் ஏன் இவர்களுக்கு இவ்வளவு துன்பம் வருகிறது? ஒட்டுமொத்த முஸ்லிம்களும் ஏன் எதிர்க்கின்றனர்?

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இதற்கு பதில் அளிக்கும் விதமாக கூறுகின்றார்கள்:**

உண்மையாளருக்கு எதிராக தப்பெண்ணம் தூண்டிவிடப்படுகிறது. அவரோ உண்மையாளர். ஆனால் துக்கம் தரப்படுகிறது. அவர் மீது சாபம் இடப்படுகிறது. இதையெல்லாம் செய்து விட்டு மிகவும் நற்பலன் அளிக்கும் காரியத்தை செய்து விட்டதாக மக்கள் கருதுகின்றனர். இறைவனது தேர்ந்தெடுக்கப்பட்ட நல்லடியார்களுக்கு இதனைக் கேட்டு துக்கம் ஏற்படும் போது இறைவன் ஆறுதல் அளிக்கின்றான். முன்னுள்ளவர்கள் பொறுமை செய்தது போன்று பொறுமை செய் என்று கூறுகிறான். மேலும் நான் கேட்கின்றேன்; பார்க்கின்றேன் என்று கூறுகின்றான். பிறகு அத்தூயவர்கள் அந்த இறைவனின் ரோஷம் பொங்கி எழுகின்ற வரை பொறுமை செய்கின்றனர். பிறகு அவனது ஓர் தோற்றம் எதிரிகளை சின்னாபின்னமாக்கி விடுகிறது. எனவே முதலில் தூயவர்களுக்கு துன்பம் ஏற்படுகிறது. இறுதியில் நல்ல முடிவு

அவர்களுக்கும், துயரம் எதிரிகளுக்கும் ஏற்படுகிறது. மக்கள் எள்ளி நகையாடுவர். துக்கம் தருவர். இறுதியில் உனக்கே இறையருள் கிடைக்கும் என்று அந்த இறைவன் எனக்குப் புரிய வைத்தான். பிறகு அவன் அந்த எதிரிகளை தோல்வியடையச் செய்து தலைகுனிய வைக்கிறான்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஒரு கஷ்ஃப் - ஐ குறிப்பிட்டு மேலும் கூறுகின்றார்கள்.**

நான் ஒரு கஷ்ஃபில் பார்த்தேன். ஒரு மலக்கு என் முன் வந்தார். அவர் கூறுகிறார். மக்கள் அலைந்து கொண்டிருக்கிறார்கள். நான் கேட்கிறேன். நீங்கள் எங்கிருந்து வருகிறீர்கள்? தனியாகவும் ஒற்றையாகவும் உள்ளவனிடமிருந்து வருகிறேன் என்று அவர் பதில் கூறுகிறார். மக்கள் அலைந்து கொண்டிருக்கிறார்கள்; சரி! நீரும் அலையப் போகின்றீரா? என்று நான் கேட்டதற்கு நாம் உம்முடன் இருக்கிறோம் என்று அம்மலக்குகள் பதில் கூறினர். பிறகு அந்நிலை மாறி விட்டது. அதாவது விழித்து விட்டேன்.

**மேலும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

இவையனைத்தும் இடையில் ஏற்படுவதாகும். இத்துன்பங்கள் நபிமார்களுக்கு கிடைக்கும் இறுதி முடிவாகாது. இறைவனது செயல்திட்டங்களின் ஒரு பகுதியாகும். மீண்டும் மீண்டும் அவ்விறைவன் எனக்கு இல்ஹாம் அறிவித்தான். அவை ஓர் ஆயிரத்தையும் தொட்டிருக்கும். அவை அனைத்தும் எனக்கு சூரிய வெளிச்சத்தைப் போன்று வெளிப்பட்டன. நான் உனக்கு வெற்றியைத் தருவேன். உனது ஜமாஅத் கியாமத் வரை மேலோங்கியே இருக்கும். வலுவான தாக்குதல் கொண்டு நான் உனது உண்மையை வெளிப்படுத்துவேன் என்று கூறினான்.

இந்த இல்ஹாம்களையெல்லாம் எல்லாரும் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பதற்காக எழுதப்படவில்லை. மாறாக, ஒவ்வொன்றிற்கும் ஒரு பருவம் உண்டு. அக்காலம் வரும்போது நான் எழுதியவை அனைத்தும் உண்மையாகும். அப்போது மிக மிக அதிகமாக ஈமான் அதிகரிக்கவும், உறுதி அதிகரிக்கவும் காரணமாகும். **வஸ்ஸலாம் அலா மனித்தபல் ஹுதா** – நேர்வழியைப் பின்பற்றுபவர்களுக்கு ஸலாம் உண்டாவதாக.

மேலும் அத்துடன் இன்னொரு துஆக்காகவும் கூற விரும்புகிறேன். பாகிஸ்தானில் நடைபெறும் அட்டூழியங்கள் ஒழிவதற்காகவும், அஹ்மதிய்யத்தின் மூலம் இந்நாட்டை அல்லாஹ் பாதுகாக்கவும் துஆ செய்யுங்கள். அஹ்மதிய்யத் இந்நாட்டிற்காக கணிசமாக உழைத்துள்ளது. பெரும் தியாகம் செய்துள்ளது. அமைதியை குலைப்பவர்கள், இன்று கூச்சலிடுபவர்கள் பாகிஸ்தானுக்காக நடைபெற்ற அந்த முயற்சிகளில் பங்கு பெறவும் இல்லை. மாறாக, புதிதாக ஒரு வழிமுறையை கடைபிடித்து இஸ்லாத்தின் பெயரால் நாட்டை பிளவுபடுத்துவதற்கு முயற்சி செய்து கொண்டிருக்கின்றனர். அல்லாஹ் இந்த தேச விரோதிகளைப் பிடிப்பதற்கும் விரைவில் ஏற்பாடு செய்வானாக! இந்த நாட்டை காப்பாற்றுவானாக! ஆமீன்.

★ ★ ★ ★ ★

**JUMUA KUTHBA**
**HADHRAT KHALIFATUL MASIH V**
**AT BAITUL FUTUH MOSQUE, LONDON**
**ON 16.10.2009**

Translated by : **Muallim M. NIZAMUDDIN**
Published by : **MAJLIS KHUDDAMUL AHMADIYYA**
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
**TELEFAX : 0462 - 2352456**